" 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1990) நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாணபுமிகு திரு. வீரபாண்டி சேர. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.:

" 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு *வேளாண் விளை பொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

13-40 மணி.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக் கூடிய, தமிழ் மாநிலத்து வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தை மேலும் நீட்டிப்பது சம்பந்தமாக இந்தச் சட்டமுன்வடிவு, கடந்த 1977-ஆம் ஆண்டு, மே திங்கள், 11-ஆம் நாளிலிருந்து கடந்த 14 ஆண்டுக் காலமாக ஒவ்வொரு ஆண்டும் நீட்டிக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதை அரசு, இனிமேலாவது நீட்டிக்காமல், அதற்கான குழுவை அமைப்பதற்கு முன் வர வேண்டும். வருகிற 1990-ஆம் ஆண்டு டிசம்பர் வரை இந்த சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்குள்ளாவது, வேளாண்மை விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய வகையில் குழுக்களை நியமிப்பதற்கான தேர்தலை நடத்த வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு அதிகாரிகள் ஒவ்வொரு ஆண்டும், இப்பொழுது இங்கே இருப்பார்கள்: அடுத்து வேறொரு ஊருக்கு மாற்றிச் சென்று விடுவார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு விலை கிடைப்பதற்கான ஒரு உத்தரவாதத்தை செய்வதற்கு அவர்களுக்கு அத்தியாவசியமான அக்கறைகள் இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதில்லை. ஆகவேதான், நான்

* 26—4—1990-ம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

கேட்டுக்கொள்வது, அந்தக் குழுக்களை அமைப்பதற்கான ஏற்பாட்டை கால தாமதமின்றி செய்து கொடுக்க வேண்டும். அதைபோல், இன்றைக்கு வேளாண்மை விற்பனை அங்காடி இருப்பது என்பது, எல்லா விவசாயிகளுக்கும் தெரியாது: ஒரு சில இடங்களிலேதான் அது தெரியுமே ஒழிய, எல்லா விவசாயிகளுக்கும் தெரியக்கூடிய சந்தர்ப்பம் இல்லை. ஆகவே, எல்லா இடங்களிலும் இந்த விற்பனை அங்காடியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு முன் வர வேண்டும். மேலும் காலத்தை, தமிழகத்தில், ஒவ்வொரு ஆண்டும் நீட்டித்துக் கொண்டு போகாமல்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாருமே அப்படித் தான் கருதுகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : அதை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சே. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 14 மாவட்ட விற்பனைக் குழுக்கள் உள்ளன. கோயம் புத்தூர் விற்பனைக் குழுவின் தனி அலுவலருடைய பதவிக் காலம் 10—5—1990-உடன் முடிவடைகிறது. மற்ற 13 விற்பனைக் குழுக்களுக்கு 5—12—1990 வரை தனி அலு வலர்களின் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1977-இல் இக் குழுக்கள் கலைக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் காலநீட்டிப்பு செய்து தற்போது 13 ஆண்டுகள் என ஆகியுள்ளது. எனவே, கோயம்புத்தூர் விற்பனைக் குழுவின் தனி அலுவல ருடைய பதவிக்காலத்தை 13 ஆண்டுகள் என்பதற்கு பதிலாக, 13 ஆண்டுகள், 7 திங்கள் என 5—12—1990-வரை, மற்றக் குழுக்களின் தனி அலுவலர்களுடைய பதவிக் காலம் வரை, நீட்டிக்கப்பட வேண்டும் என்பது சட்ட முன் வடிவு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், ஏற்கெனவே சட்டம் இயற்றப் பட்ட அடிப்படையில் விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு, சட்டத் துறையினுடைய ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது. விரைவிலே, அந்த விதிமுறைகள் அனுமதி பெற்றவுடன் இந்த விற்பனைக் குழுவுக்கு தலைவர், உறுப் பினர்கள் ஆகியோரை நியமித்து, சிறப்பாக விற்பனைக் குழுக்கள் இயங்க, இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1990) ஆய்வுக்கு எடுத்து கொள்ளப் பெற வேண்டும்."

1990 மே, 7]]பேரவைத் தலைவர்]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தம் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் இருப்பிடத்தில் இல்லாததால், திருத்தம் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவலல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை (8—5—1990) காலை 9.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை 13.44 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.